பக்கங்கள் 12
விலை ரூ. 50
Registered as a Newspaper
# உதயன்
சுடர் : 38
கதிர் : 198
திங்கட்கிழமை 12 ஜூன் 2023
வைகாசி 29 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

போரின் பின்னான 13 ஆண்டுகளில்

# பயங்கரவாதத் தடைச்சட்ட கைது; 6 வீதமானோர் மீதே வழக்கு!

## தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஊடாக அம்பலம்

**யாழ்ப்பாணம், ஜூன் 12**

**கடந்த 13ஆண்டுகளில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 2 ஆயிரத்து 793 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 184 பேர் சந்தேகநபர்களாக அடையாளப்படுத்தப் பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.** »11

கடந்த 3 ஆண்டுகளில் இடம்பெற்ற

## பகிடிவதைகள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கவும்

### உயர்நீதிமன்றம் பணிப்பு

கொழும்பு, ஜூன் 12
கடந்த மூன்று ஆண்டுகளில் நடந்த பகிடிவதை கள் மற்றும் பதிவான வழக்குகள் தொடர்பான விசாரணைகள் குறித்து தனித்தனியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு பல்கலைக்கழகங்கள் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு உயர்நீதிமன் றம் உத்தரவிட்டுள்ளது. »11

## உள்ளூராட்சி வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கு யோசனை

### அமைச்சர் ஜானக வக்கும்புர தகவல்

கொழும்பு, ஜூன் 12
உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கான யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாக மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச் சரும் பிரதமருமான தினேஷ் குணவர்த்தன »11

முதலீட்டாளர்களுக்கு

## அரச கட்டடங்கள் குத்தகைக்கு!

கொழும்பு, ஜூன் 12
உத்தேச புதிய கொழும்பு பாரம்பரிய நகரத் திட் டத்தின் கீழ், கொழும்பு நகரிலுள்ள பல அரச கட்டடங்கள் முதலீட்டாளர்களுக்கு »11

## 350 ஆசிரியர்களுக்கு வடக்கில் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 12
வட மாகாணப் பாடசாலைகளுக்கு ஆசிரியர் களாக நியமனம் செய்யப்படுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள கற்பித்தல் தொடர்பான தேசிய போதனாவியல் டிப்ளோமா »04

## மாங்காய் பறிக்க முயன்று தவறி வீழ்ந்தவர் உயிரிழப்பு

### யாழ். நகரில் பரிதாபம்

யாழ்ப்பாணம், ஜூன் 12
மாங்காய் பறிப்பதற்கு முயன்றவர் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். »11

## ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை கோட்டைக்கு விரைவில் இடமாற்றம்!

கொழும்பு, ஜூன் 12
ஜனாதிபதி மாளிகை ஜனாதிபதி செயலகம் மற் றும் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகை என்பன கொழும்பின் புறநக ரான சிறி ஜயவர்த்தனபுர கோட்டைக்கு »11

## தண்டனைபெற்ற அதிகாரியே கஜேந்திரகுமாரை மிரட்டினார்!

### சிங்கள ஊடகவியலாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 12
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலத்தை மருதங்கேணி »11

டெஸ்ட் கிரிக்கெட் உலகக் கிண்ண இறுதி ஆட்டம்

## இந்தியாவை வீழ்த்தி சம்பியனானது ஆஸி!

ஓவல், ஜூன் 12
உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதி ஆட்டத் தில் அவுஸ்திரேலிய அணி 209 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது. »11

## வேட்பாளர்களின் கட்டுப்பணத்தை மீளச்செலுத்தும் நிலை நேரிடலாம்

### தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 12
தேசிய எல்லை நிர்ணயக் குழுவின் புதிய அறிக்கைக்கு அமைய, உள்ளூ ராட்சி மன்றத் தேர்தலை நடத்துவ தற்கான யோசனை நாடாளுமன்றத் தில் நிறைவேற்றப்பட்டால், தேர் தலுக்காக இதுவரை செலவிடப் பட்ட 1.1 பில்லியன் ரூபா »04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்குச் செல்ல அனுமதி வழங்குங்கள்

## மோடிக்கு சாந்தன் கடிதம்

சென்னை, ஜூன் 12

**இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டு 30 வருட சிறைத்தண்டனையின் பின்னர் விடுதலைசெய்யப்பட்ட சாந்தன், தன்னை சொந்த நாடான இலங்கைக்குச் செல்வதற்கு அனுமதிக்குமாறு இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.**

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்ட 7 பேரும் 30 ஆண்டுகள் சிறை அனுபவித்த நிலையில் கடந்த ஆண்டு விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்களில் முருகன், சாந்தன், ஜெயக்குமார் மற்றும் ரோபர்ட் பயஸ் ஆகிய நால்வரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள். விடுதலை செய்யப்பட்டு 6 மாதங்களுக்கு மேலாகியும் அவர்கள் நால்வரும் திருச்சியிலுள்ள சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் 'விடுதலையாகியபோதும் தற்போது ஒரு அறையில் கைதி போன்று முகாமில் அடைக்கப்பட்டுள்ளேன். எனது சொந்த நாடான இலங்கைக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும்' எனத் தெரிவித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு சாந்தன் கடிதம் அனுப்பியுள்ளார். இதற்கு முன்னரும், பிரதமர் மோடியிடம் இதுதொடர்பில் பல்வேறு கோரிக்கைகளையும் வலியுறுத்தல்களையும் சாந்தன் முன்வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## ரோபோக்கள் செயலிழப்பு

கொழும்பு, ஜூன் 12

தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின்படி, இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையால் 2020ஆம் ஆண்டு ரோபோட்டிக்ஸ் சிறப்பு மையத்துக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட நான்கு ரோபோ இயந்திரங்கள் குறித்த மையம் செயற்படாததால் துருப்பிடித்துப் பழுதடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஆளும்கட்சி எம்.பி.க்களை சந்திக்கவுள்ள ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 12

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் இன்று திங்கட்கிழமை விசேட சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது. இந்தச் சந்திப்பு மாலை 5.30 மணியளவில் நடைபெறும் என்று கூறப்படுகின்றது.

நாட்டில் தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர ஆளும்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் தம்மால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளில் எதிர்கொள்ள நேரிட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியிடம் தெளிவுபடுத்தவுள்ளனர்.

தற்போதுள்ள பிரச்சினைகளை தீர்த்து பெரும்பான்மை பலத்தை பாதுகாத்து அரசாங்கத்தின் பணிகளை வலுவாக முன்னெடுத்துச் செல்வதும் இந்தக்கலந்துரையாடலின் மற்றுமொரு நோக்கம் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை- கடந்தவாரம் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பில், கடந்த காலத்தில் இடம்பெற்ற அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின்போது தமது சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டமை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பாக பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கவலை வெளியிட்டிருந்தனர்.

இந்த விசாரணைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் வழங்கிய உத்தரவாதத்துக்கு அமையவே, வழக்குகள் மீளப்பெறப்பட்டன என்றும், எனினும் அதன் பின்னர் விசாரணைகளில் எந்தவொரு முன்னேற்றத்தையும் அவதானிக்க முடியவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இது தொடர்பிலும் இன்று நடக்கும் சந்திப்பில் அவதானம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-இ)



## சங்கிலிய மன்னனின் சிரார்த்ததின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 12

சிவசேனை அமையத்தின் ஏற்பாட்டில் யாழ். இராஜ்ஜியத்தின் கடைசித் தமிழ் மன்னனான 2ஆவது சங்கிலிய மன்னனின் 404 ஆவது சிரார்த்ததின நினைவேந்தல் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

மறவன்புலவு சச்சிதானந்தத்தின் நெறிப்படுத்தலின்கீழ் சங்கிலிய மன்னன் நினைவுக் குழுவின் தலைவர் பா.பாலகணேசன் தலைமையில் யாழ். நல்லூர் முத்திரைச்சந்தியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் நிகழ்வுகள் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன், மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய தர்மகர்த்தா இ.சுந்தரேஸ்வரக் குருக்கள் ஆகியோர் பங்கேற்று, சங்கிலிய மன்னன் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்தனர். தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை ஓய்வுநிலை விரிவுரையாளர் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், மதத்தலைவர்கள், மாநகர சபை ஊழியர்கள், கலைஞர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ச-27)

## சிறுபான்மையினரை மௌனமாக்க முயற்சி

### அமெ. செனட் குழு கவலை

கொழும்பு, ஜூன் 12

இலங்கையில் இன, மத சிறுபான்மையினரை மௌனமாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக அமெரிக்க செனெட்டின் வெளிவிவகாரக் குழு கவலை வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் செனெட் வெளிவிவகாரக் குழுவின் உத்தியோகபூர்வ ருவிற்றர் பதிவில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விடுதலை செய்யப்பட்டமையை நான் வரவேற்கும் அதேவேளை அவர் கைதுசெய்யப்பட்டமை - அச்சுறுத்தப்பட்டமை - துன்புறுத்தப்பட்டமை தொடர்பாக ஆழ்ந்த கவலை கொண்டுள்ளேன் என செனெட் குழுவின் தலைவர் செனெட்டர் மெனெட்டெஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பாதுகாப்புப் படையினர், புலனாய்வுப் பிரிவினரின் அச்சுறுத்தல்கள் - துன்புறுத்தல்கள் தொடர்பாகவும், இன, மத சிறுபான்மையினரை மௌனமாக்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும் நான் கரிசனை கொண்டுள்ளேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## சுண்டிக்குளம்- தொண்டைமானாறு வாய்க்கால்வழி மழைநீர் சேமிப்பு!

### சுற்றாடல் அமைச்சு செயற்றிட்டம்

யாழ்ப்பாணம் - சுண்டிக்குளம் தொடக்கம் தொண்டைமானாறு வரை வாய்க்கால் வழியாகச் செல்லும் மழைநீரை சேமித்து அதனை விவசாயம் மற்றும் கால்நடைகளுக்கு பயன்படுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சுற்றாடல் அமைச்சும் நீர்ப்பாசனத் திணைக்களமும் இணைந்து இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

மழை காலங்களில் மழை வெள்ள நீர் வாய்க்கால் வழியாக, மருதங்கேணி, பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி, கரவெட்டி, பருத்தித்துறை, வலிகாமம் கிழக்கு ஆகிய ஆறு பிரதேச பிரிவுகள் ஊடாக தொண்டைமானாற்றில் கடல் நீருடன் கலக்கின்றது. இந்த மழைநீர் உரிய பயன்பாடின்றி வீணாகின்றது.

மழைநீரைச் சேமிக்கவும் அதனை உரியமுறையில் பயன்படுத்தவும் சிறந்த திட்டம் வகுத்து எதிர்காலத்தில் ஏற்படும் நீர்ப் பற்றாக்குறையை தவிர்க்க வேண்டுமென்று வலியுறுத்தல்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், வாய்க்காலூடாக வரும் மழைநீர் குளங்களுக்குச் செல்லக்கூடிய வகையில் வாய்க்கால்கள் அமைப்பதால் அந்தந்த இடங்களிலுள்ள குளங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கைகளுக்கு பயன்படுத்துவதுடன் கோடைகாலங்களில் நீருக்காக அலையும் கால்நடைகளுக்கு குடிதண்ணீர் பிரச்சினையையும் தவிர்க்கமுடியும். அத்துடன் கடல் நீர் உள்ளே வராமல் தடுக்கும் தடுப்பணைகள் உள்ள பகுதிகளில் வாய்க்கால் மூலம் வரும் மழைநீரைத் தடுத்து - சேமித்து வைத்துப் பயன்படுத்தமுடியும். இந்தச் செயற்றிட்டத்தை துரிதகதியில் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சுற்றாடல் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகங்களை ஒடுக்கமுயலும் சட்டவரைவைத் தோற்கடிப்போம்

## ஜயந்த சமரவீர எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 12**

**ஊடகங்களுக்கு அனுமதிப்பத்திரம் பெறவேண்டுமாயின் இனி சகல ஊடகங்களும் அரசாங்கத்துக்கு சார்பாகவே செயற்பட வேண்டும். அதற்கமைய ஊடக சுதந்திரத்தை முடக்கி ஒளிபரப்பு ஒழுங்கு படுத்தல் அதிகாரசபையால் சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டால் ஊடகங்களின் அழிவுப்பாதைக்கு அது வழிவகுக்கும். அதற்கு இடமளியோம் - இவ்வாறு களுத்துறையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.**

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-
இந்த நாட்டு மக்களின் கருத்துச் சுதந்திரம், தகவல் பரிமாற்றம் உரிமைகளுக்கு இடமுண்டு. அரசாங்கம் தமக்கு எதிராக விமர்சனக் கருத்துகளை ஏற்றுக்கொள்ளாது ஊடகங்களை அடக்க முயற்சிக்கின்றது.

இந்தச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டால், 1966ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வானொலிச் சட்டம், 1987ஆம் ஆண்டு இயற்றப்பட்ட ரூபவாஹினிச் சட்டம் ஆகிய ஒலி மற்றும் ஒளிபரப்புச் சட்டங்கள் இரத்துச் செய்யப்படும்.

அத்துடன் ஒருவருட காலத்துக்கு மாத்திரமே ஊடகங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். ஒருவருட காலத்துக்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தை 9 மாத காலத்துக்குப் பின்னர் புதுப்பிக்கவேண்டும்.

ஊடகங்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதை ஊடகத் துறை அமைச்சின் செயலாளர், தொலைத்தொடர்பு ஒழுங்குப் படுத்தல் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஜனாதிபதியால் பெயர் குறிப்பிடப்படும் மூன்று உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் ஸ்தாபிக்கப்படும் அதிகாரசபையே தீர்மானிக்கும்.

ஜனாதிபதியின் பிரதிநிதிகள் இந்த அதிகாரசபையில் அதிகாரமிக்கவர்களாகச் செயற்படுவார்கள். ஊடக நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் அதிகாரசபை இறுதித் தீர்மானம் எடுக்கும்.

அதிகாரசபையின் அனுமதியில்லாமல் எந்த ஊடக நிறுவனமும் செயற்படமுடியாது. அனுமதிப் பத்திரம் மறுக்கப்படும்போது குறித்த ஊடக நிறுவனத்தின் சேவை முடக்கப்படவேண்டும்.

அனுமதிப்பத்திரம் பெறவேண்டும் என்றால் சகல ஊடகங்களும் அரசாங்கத்துக்குச் சார்பாகவே செயற்படவேண்டும்.

அரசாங்கத்துக்கு எதிராக எவரும் செயற்படக்கூடாது என்பதையே இந்தச் சட்டவரைவு மறைமுகமாகக் குறிப்பிடுகிறது - என்றார். (ச-இ)

ஸ்ரீலங்கா ரெலிக்கொம்

# தனியார் மயமாக்க அனுமதிக்கவில்லை

## சரத் வீரசேகர எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 12
நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் வகையில் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தை தனியார் மயமாக்குவதற்கு பரிந்துரைக்கவில்லை என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரான சரத் வீரசேகர தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தொலைத்தொடர்பு நிறுவனத்தை தனியார் மயமாக்கக்கூடாது என்பது தொடர்பாக மூன்று சிறப்பு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஸ்ரீலங்கா ரெலிக்கொம் தனியார்மயப்படுத்தப்படுவதால் ஏற்படும் தேசியப் பாதுகாப்புத் தொடர்பான பாதிப்புக்கள் குறித்து அறிக்கையிடப்பட்டுள்ளது. தொலைத்தொடர்பு நிறுவனத்தில் அரசாங்கத்துக்கு 4 ஆயிரத்து 905 பங்குகள் உள்ளன. எஞ்சிய பங்குகள் தனியார்துறையிடத்தில் உள்ளன. அரசாங்கம் தனியார் பொதுப் பங்காளிகளின் கீழ் தொடர்ந்து இலாபமீட்ட வேண்டும் மற்றும் தேசிய பாதுகாப்பை பராமரிக்கவேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதால், நிறுவனத்தை தனியார்மயமாக்க பரிந்துரைக்கப்படவில்லை. பயங்கரவாதிகளுக்கு எந்த வகையிலும் உதவிய எந்த அமைப்பும் ரெலிக்கொம் நிறுவனத்தின் எந்தப் பகுதியையும் வாங்கவும், தேசிய சொத்துக்களைக் கட்டுப்படுத்தவும் அனுமதிக்கக் கூடாது - என்றார். (ச-இ)

# டெங்கு நோயாளர்களில் 25 வீதம் மாணவர்கள்!

கொழும்பு, ஜூன் 12
நாட்டில் பதிவாகிவரும் டெங்குநோயாளர்களில் 25 சதவீதமானவர்கள் பாடசாலை மாணவர்கள் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 42 ஆயிரத்து 184 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். 61 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகள் டெங்கு அபாயப் பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அடையாளம் காணப்படும் டெங்கு நோயாளர்களில் பாடசாலை மாணவர்கள் 25 சதவீதம் பதிவாகியுள்ளனர்.

இந்தநிலையில் டெங்கு நுளம்பு பரவுவதை தடுக்கும் வகையில், பாடசாலை வளாகங்களை சுத்தம் செய்யும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்குமாறு கல்வி அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (ச-இ)

# சாரதி அனுமதிப்பத்திரங்களை விரைவில் வழங்க நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 12
இதுவரை விநியோகிக்க முடியாதுள்ள சாரதி அனுமதிப்பத்திரங்களை மூன்றாம் தரப்பினர் மூலம் விநியோகிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அதற்குத் தேவையான அமைச்சரவை அங்கீகாரத்தை பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் தெரிவித்துள்ளார்.


8 இலட்சத்து 50 ஆயிரம் சாரதி அனுமதிப்பத்திரங்கள் மூன்றாம் தரப்பினர் ஊடாக அச்சிட்டு, விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும் என்று திணைக்களம் கூறியுள்ளது. விநியோகிக்க முடியாத நிலையிலுள்ள சாரதி அனுமதிப்பத்திரங்களை மாத்திரம் 6 முதல் 7 மாதங்களுக்குள் மூன்றாம் தரப்பினர் ஊடாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம)




**ச**னிமாற்றம், வியாழ மாற்றங்களைவிட உத்தியோகம் பாக்கிறவைக்கு முக்கியமானது இட மாற்றம்தான். இப்ப சேர்மார், ரீச்சர்மாருக்கு இட மாற்ற சீசன். கொரோனா வீட்டில சஞ்சரிச்ச, அங்கை இருந்து இறங்கி இப்ப சிலருக்கு சுக்கிர திசையையும், கனபேருக்கு உக்கிர திசையையும் குடுக்க ரெடியாகிட்டுது. கூடுதலா யாழ்ப்பாணத்தில இருந்து வெளிமாவட்டங்களுக்கு போறவைக்குத் தான் இடமாற்றம் எண்டுறது பேதியைக் குடுக்கும்.

வெளிமாவட்டப் பள்ளிக்கூடங்களிலதான் கடும் ஆளணிப்பிரச்சினை. அதால புதிசா ரீச்சிங்குக்கு போற எல்லாரையும் வெளிமாவட்டத்துக்குத்தான் பொதுவா விடப்போயினம். எட்டுவருசத்துக்கு கட்டம் போட்டு அவையை வெளிமாவட்டங்களுக்கு கட்டாயமா அனுப்பப்போயினம். அதைவிட இவ்வளவு காலமும் வெளிமாவட்ட டியூட்டி செய்யாமல், டிமிக்கி விட்டவையில 48 வயசுக்கு உட்பட்ட சேர்மாரும், 43 வயசுக்குட்பட்ட ரீச்சர்மாரும் வெளிமாவட்டத்தில கட்டாயம் 3 வருச டியூட்டி செய்யவேணும் எண்டு புதுசா வந்த சுற்றுநிருபத்தில சொல்லப்பட்டிருக்கு. அதால இந்தமுறை வெளிமாவட்டத்தில இவ்வளவு காலமும் டியூட்டி பார்த்திட்டு யாழ்ப்பாணம் வாறவையைவிட, யாழ்ப்பாணத்தில இருந்து வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி எண்டு வெளிமாவட்டங்களுக்கு போறவையின்ர தொகை கூடமா இருக்கப்போகுது.

யாழ்ப்பாணத்தில இருந்து வெளிமாவட்டங்களுக்கு போறவைக்கு எந்தெந்தப் பள்ளிக்கூடங்களில டியூட்டி எண்டு முடிவெடுக்கிறது அந்தந்த வலயப் பணிப்பாளர்மார் தான். இஞ்சதான் ஒரு சிக்கல் இருக்கு. சொந்தமாவட்டக்காரருக்கு அவையின்ர வீட்டுக்கு கிட்ட உள்ள பள்ளிக்கூடங்களைக் குடுத்திட்டு யாழ்ப்பாணத்தில இருந்து போறவைக்கு பஸ் ரூட் கூட இல்லாத தூர இடத்துப் பள்ளிக்கூடங்களை ஒதுக்கி, அதில இன்பம் காணுற ஆக்களும் இருக்கினம். குறிப்பா முல்லைத்தீவு, மன்னார் மாவட்டத்துக்கு இடமாற்றம் கிடைச்சா அவைக்கு ரவுணை அண்டின இடங்கள் இல்லாட்டி பஸ்ஸில போய்வரக்கூடிய பள்ளிக்கூடத்தை ஒதுக்கினால் அவை போய் வர ஈஸியா இருக்கும். ஆனால் மன்னாரைச் சொந்த இடமாக் கொண்ட ஆக்களுக்கு அங்கத்தைப் பள்ளிக்கூடத்தைப் போட்டிட்டு, யாழ்ப்பாணத்தில இருந்து போறவையை மன்னார் ரவுணில இருந்து நாப்பது, அம்பது மைல் தூரத்தில இருக்கிற பஸ் ரூட் குறைஞ்ச பள்ளிக்கூடங்களைக் குடுத்தால் அவை எப்பிடி மனமா அங்க நிண்டு படிப்பிக்க முடியும்? அதால உள்ளூரில இருக்கிறவைக்கு இப்பிடியான தூர இடத்துப் பள்ளிக்கூடங்களை ஒதுக்கிக்கொண்டு, யாழ்ப்பாணம் மாதிரி வெளிமாவட்டங்களில இருந்து போறவைக்கு கொஞ்சம் போக்குவரத்துப் பிரச்சினை இல்லாத, அவை வந்து போக வசதியான பள்ளிக்கூடங்களை ஒதுக்கினால், அவையும் மனமாப் படிப்பிப்பினம், இடமாற்றம் எல்லாருக்கு சுக்கிரதிசையா மாறும், பிள்ளையளும் நல்ல மார்க்ஸ் எடுப்பினம். முடிவெடுக்கிற பெரியவை கொஞ்சம் இதுகளை யோசிச்சால் நல்லது.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோருக்கு என்னதான் நேர்ந்தது?

## உறவுகளிடம் வெளிப்படுத்துங்கள்! செஞ்சிலுவைச் சங்கம் வலியுறுத்து



**கொழும்பு, ஜூன் 12**
**காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது? என்பது குறித்து நீண்டகாலமாகத் துன்பம் அனுபவித்துவரும் அவர்களது குடும்பத்தினருக்கு வெளிப்படுத்தவேண்டும். அதற்கு பக்கச் சார்பற்ற - நடுநிலையான - சுயாதீனமான- மனிதாபிமானக் க்ட்டமைப்பு உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.**

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் கிறிஸ்டின் சிபோல்லா மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோரிடையே சந்திப்பொன்று கடந்தவாரம் இடம்பெற்றது. சந்திப்பின்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அனுபவித்து வரும் துன்பங்களுக்கு நீதி மற்றும் தீர்வை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

காணாமற்போன தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதறியாது அவர்களது உறவுகள் அனுபவிக்கும் பெரும் துயரம் குறித்து செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர், அமைச்சர் அலி சப்ரியிடம் எடுத்துரைத்தார். அத்துடன், உரிய செயன்முறை சுயாதீனமாக பக்கச்சார்பின்றி உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தார்.

"இது மிகக்கடினமான நீண்ட பயணம். இனங்களுக்கிடையிலான பாலத்தைக் கட்டியெழுப்புவதுடன் கடந்தகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்கும் அதேவேளை, தேசியப் பாதுகாப்பை எதிர்காலத்தில் முன்னிறுத்தி செயலாற்றவேண்டும். பல்லினத்தன்மை என்பது பலம். அதனைப் பின்னடைவாக மாறுவதற்கு இடமளிக்கக்கூடாது'' என்று அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டார். (ச-இ)

# சமூகவன்முறையின் வெளிப்பாடே மாணவர்களின் நடவடிக்கை

## க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குப் பின்னரான செயற்பாடுகள் தொடர்பில் மருத்துவ நிபுணர் தகவல்

கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் வன்முறைச் செயற்பாடுகள் சமூகத்தில் நிலவும் வன்முறைகளின்தன்மையையே வெளிப்படுத்துகின்றன - இவ்வாறு உளநல மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.
கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பாடசாலைகளின் வளங்கள் மற்றும் அரச சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்திருந்த பல சம்பவங்களும் மோதல்களில் ஈடுபட்டிருந்த செய்திகளும் பதிவாகியுள்ளன.
திம்புலாகல மகுல்தமன மகா வித்தியாலய மாணவர்கள் குழுவொன்று வகுப்பறைகளின் மின் விசிறிகள் மற்றும் மலசலக்கூட கதவுகளை உடைத்துள்ளதுடன், சம்பவம் தொடர்பில் பாடசாலையின் அதிபர் மன்னம்பிட்டி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். கண்டி கட்டுகஸ்தோட்டை பகுதியிலுள்ள பிரபல அரச பாடசாலை ஒன்றில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் குழுவொன்று மாணவர் ஒருவரை கிரிக்கெட் விக்கெட்டால் தாக்கியதையடுத்து, பாதிக்கப்பட்ட மாணவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 6 மாணவர்களும் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிவிட்டு வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த மாணவி ஒருவரை அவரது ஆண் நண்பர் ஆயுதத்தால் தாக்கிய சம்பவம் கண்டி தென்பிடிகம பகுதியில் பதிவாகியுள்ளது.
இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் கருத்துரைத்த, காலி கராப்பிட்டி போதனா மருத்துவமனையின் உளநல மருத்துவர் ரூமி ரூபன், 'அண்மைக்காலமாக பதிவாகும் இவ்வாறான கட்டுப்பாடற்ற நடவடிக்கைகள் சமூகத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறுகின்றது. பரீட்சை நிறைவடைந்த பின்னர் கிடைக்கப் பெறும் சுதந்திரத்தை மாணவர்கள் வன்முறை வடிவில் வெளிப்படுத்துகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் சமூகத்தில்நிலவும்வன்முறையையே வெளிப்படுத்துகின்றன. தம்முள் காணப்படுகின்ற வன்முறையை தாக்குதல்அல்லதுதூற்றுதல்போன்ற சம்பவங்களின் ஊடாக வெளிப்படுத்தி, அதில் சந்தோசத்தை அடையும் சமூகம் உருவாகி வருகின்றது. இது ஆபத்தான போக்கு' என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-ஒ.இ)

### 350...

தாரிகள் 350 பேருக்கு மாகாணத்தில் வெற்றிடம் உள்ள பாடசாலைகள்முன்னுரிமைப்படுத்தப்பட்டு அவர்களுக்கான நியமனக்கடிதங்கள் எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேசிய கல்வியியற் கல்லூரியில் வைத்து வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸால் வழங்கப்படவுள்ளதாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
மேலதிக விவரங்களை வடமாகாணசபையின் இணையத்தளம் www.np.gov.lk., வடமாகாணக் கல்வி அமைச்சின் இணையத்தளம் www.cdumin.np.gov.lk ஆகியவற்றில் பார்வையிட முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ.159)

### வேட்பாளர்களின்...

வீணாகிவிடும். அத்தோடு, வேட்புமனுத் தாக்கல் செய்துள்ள வேட்பாளர்களின் கட்டுப்பணத்தை மீளச் செலுத்த வேண்டியேற்படும் என்று தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
நிதியை வழங்கமுடியும் என்று திறைசேரி நீதிமன்றத்துக்கு அறிவித்தால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எம்மால் தேர்தலை நடத்தமுடியும்.
தேர்தலுக்கான முன்னேற்பாடுகளுக்காக இது வரை எம்மால் 1.1 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. எனினும் அந்தச் செலவு பிரயோசனம் அற்றதாகியுள்ளது. ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வேட்புமனுக்கள், தற்போதுள்ள வாக்குச்சீட்டுக்களின் கீழ் தேர்தல் நடத்தப்பட்டால், இந்தச் செலவு வீணாகாது. எல்லை நிர்ணயக் குழுவின் புதிய அறிக்கைக்கு அமையத் தேர்தல் நடத்தப்பட்டால் 1.1 பில்லியன் செலவு வீண் செலவாகும்.
எல்லை நிர்ணயக் குழுவுக்கும் எமக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை. எல்லை நிர்ணயம் செய்பவர்களால் தேர்தலை நடத்தமுடியாது. மதிப்பாய்வு செய்வதற்கு எமக்கு எல்லை நிர்ணய அறிக்கை இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை. புதிய எல்லை நிர்ணயத்தின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற கொள்கை ரீதியான தீர்மானம் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டால் அதனை எம்மால் தடுக்கமுடியாது.
கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுக்கும் அரசாங்கமே 1.1 பில்லியன் ரூபா செலவுக்கு பொறுப்புக்கூறவேண்டும். அத்தோடு, புதிய எல்லை நிர்ணயத்தின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வேட்புமனுக்கள் இரத்துச் செய்யப்படும் என்பதோடு, வேட்பாளர்களின் கட்டுப்பணத்தையும் மீளச் செலுத்த வேண்டியேற்படும் - என்றார். (அ-ஒ.இ)

# மைத்திரி வழங்கிய மன்னிப்பு தவறு

கொழும்பு, ஜூன் 12
றோயல் பார்க் வழக்கில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஜூட் ஷமந்த ஜயமஹாவுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சட்டவிரோதமாக மன்னிப்பு வழங்கியுள்ளதாக உயர் நீதிமன்றத்தில் தெரியவந்துள்ளது.
மைத்திரிபால சிறிசேன இந்த மன்னிப்பு வழங்குவதற்கு முன்னர், முன்னாள் சட்டமா அதிபரின் ஆலோசனைகளையோ நீதி அமைச்சரின் பரிந்துரைகளையோ பெறவில்லை எனவும் தெரியவந்துள்ளது.
றோயல் பார்க் கொலை வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஜூட் ஷமந்த ஜயமஹாவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பான ஆவணம் சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டபோதே இந்த விடயங்கள் தெரியவந்துள்ளன. ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு வழங்குவதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உண்மைகள் வெளியாகியுள்ளன.
ஜூட் ஷமந்த ஜயமஹாவுக்கு மன்னிப்பு வழங்குவது தொடர்பான கோப்பு, சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளேயால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. கோப்பில் உள்ள சில ஆவணங்கள் மீது நீதிமன்றத்தின் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. மனுதாரர் தரப்பு சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்த்தன, பொதுமன்னிப்பு வழங்கும் போது சட்டமா அதிபரிடமிருந்து ஆலோசனைகள் எதுவும் பெறப்படவில்லை எனவும் பொருத்தமான சட்ட நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டினார். குற்றவாளி ஒருவருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குவதற்கு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றாமல் இந்த மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி மன்னிப்பு வழங்கும்போது, வழக்கை விசாரித்த குழாம் அல்லது நீதிபதியிடமிருந்து அறிக்கையைப் பெற வேண்டும், மேலும் மேன்முறையீடுகளை விசாரித்த நீதிமன்றங்களிலிருந்தும் அறிக்கைகளைப் பெற வேண்டும், பின்னர் அறிக்கைகள் சட்டமா அதிபருக்கு அனுப்பி ஆலோசனைபெற வேண்டும். பின்னர், இரண்டு அறிக்கைகளையும் நீதி அமைச்சருக்குப் பரிந்துரைத்த பிறகு, பிரதிவாதிக்கு மன்னிப்பு வழங்க முடியுமா இல்லையா என்பதை பரிசீலிக்க முடியும், இது வழக்கமான நடைமுறையாகும். அந்த நடைமுறைகள் எதனையும் பின்பற்றாமல் இந்த மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி தெரிவித்தார். (அ-ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கள்ளமௌனமும் அநீதியே!

**பௌ**த்தத்தை அரசியல் ஆயுதமாக எவரும் ஒருபோதும் பயன்படுத்தக்கூடாது. அவ்வாறு பயன்படுத்துவதால், பௌத்தத்துக்கு வழங்கப்பட வேண்டிய மதிப்பு, குறை மதிப்புக்கு உட்படுத்தப்படுகின்றது என்றவாறாக வெளிப்படையாகவே விமர்சித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ.

இலங்கை சுதந்திரம் பெற்ற நாள்முதல் இந்த நாட்டின் அரசியல் , பௌத்தத்தை மையப்படுத்தியதாகவே சுழன்று கொண்டிருக்கின்றது. இந்த நாட்டில் ஏற்பட்ட பல்வேறு பட்ட போராட்டங்களுக்கும் திருப்பங்களுக்கும் பின்னணியில் ஏதோவொரு இடத்தில் பௌத்தம் கனதியான பாத்திரத்தை ஆற்றியிருக்கின்றது – ஆற்றிக்கொண்டிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் பௌத்தத்தை அரசியல் ஆயுதமாக எவரும் பயன்படுத்தக்கூடாது என்ற கோரிக்கையை சஜித் பிரேமதாஸ விடுத்திருக்கின்றார். ஆனால், பௌத்தத்தை முதன்மைப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு எதிராக – பௌத்த ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக இதுவரை சஜித் வலுவான கண்டனமொன்றை வெளியிட்டுள்ளாரா? வாய் திறந்துள்ளாரா? என்ற கேள்விகளும் இங்கு எழுவது தவிர்க்க முடியாததே.

வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயமாக இருந்தாலும் சரி, முல்லைத்தீவு குருந்தூர்மலையாக இருந்தாலும் சரி, நீராவியடிப் பிள்ளையார் ஆலயமாக இருந்தாலும் சரி அல்லது யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரைப் பகுதியாக இருந்தாலும் சரி, இந்த இடங்கள் இன்று அதனதன் இயல்பான அமைதியை இழந்துள்ளன என்றால்,அதற்குஅந்தந்தப்பகுதிகளில்முன்னெடுக்கப்பட்ட – முன்னெடுக்கப்படுகின்ற பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்புத்தான் முதன்மைக் காரணம். வலிந்து மேற்கொள்ளப்படும் சிங்கள – பௌத்தத் திணிப்பால்தான் தமிழர் தாயகத்தில் இன்று குழப்பமேகம் சூழ்கின்றது என்பது ஒன்றும் பரம இரகசியம் அல்ல. அதேநேரம் இதுவொன்றும் இன்று நேற்று நடக்கும் விடயமும் அல்ல. ஆனால், இவற்றில் எவற்றுக்கு எதிராக, பொறுப்பான எதிர்க்கட்சித் தலைவராக – அனைத்து மக்களுக்குமானவராக – சர்வமத உரிமையை மதிக்கின்றவராக சஜித் நடந்துகொண்டிருக்கின்றார்?

நீதிக்கெதிராகக் காக்கப்படுகின்ற கள்ளமௌனம்கூட அநீதியே என்பர். சஜித் இந்த ஆக்கிரமிப்புக்களில் நேரடியாகப் பங்குபற்றவில்லையாயினும் அவரின் அனுசரணையுடன் இவை நடைபெறவில்லையாயினும் இந்த அநீதிகளுக்கு எதிராக அவர் காக்கின்ற கள்ளமௌனம் பேராபத்தானது. இந்தக் கள்ள மௌனத்தை கலைக்காத வரையில் அவரும் சாதாரண 'சிங்களத் தலைவரே'. மற்றும்படி அவருக்கும் சரத் வீரசேகர மற்றும் விமல் வீரவன்ஸ போன்ற தலைவர்களுக்கும் இடையில் பெரிதான வேறுபாடுகள் இல்லை. சரத் வீரசேகர பேர்வழிகள் நேரடியாக சிங்கள – பௌத்தத் திணிப்பை மேற்கொண்டு அதைத் தம் அரசியல் ஆதாயமாகக் கொண்டிருக்கின்றனர். சிங்கள –பௌத்த ஆக்கிரமிப்புக்கு எதிராகக் குரல்கொடுத்தால் 'தன் அரசியல் இருப்பு' இல்லாமல் ஆகிவிடும் என்று சஜித் மௌனம் காக்கின்றார். இதனால் சஜித் ஒரு 'வெண்ணிற ஆடைகளை அணிந்த நீதியின் தேவதூதன்' என்று சொல்லுவதற்கில்லை.

அத்துடன், பௌத்தத்தை அரசியல் ஆதாயமாக எவரும் கொள்ளக்கூடாது என்று தெரிவிக்கும் இதே சஜித்தான், கோத்தாபயவுக்கு எதிரான ஜனாதிபதித் தேர்தலின்போது தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில், தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கில் ஆயிரம் விகாரைகள் அமைக்கும் திட்டத்தை முன்வைத்திருந்தார். அவரின் இந்த விஞ்ஞாபனக் கூற்று, பௌத்தத்தை மையப்படுத்தியதாகவோ அல்லது பௌத்தத்தை அரசியல் ஆயுதமாகக் கொண்டதாகவோ அமையவில்லையா? பௌத்தத்தை மட்டுமல்ல, எந்த மதத்தை மையப்படுத்திய அரசியலும் வேரறுக்கப்பட வேண்டியதே. ஆனால், அதைச் சொல்வதற்கு சஜித்துக்கு குறைந்தபட்சத் தகுதிகூட இல்லை. அவ்வளவே.

நாளொரு நல்வார்த்தை

“எதுவுமே செய்யாமல் வீணாகும் வாழ்க்கையைவிட, எதையாவது செய்யும்போது ஏற்படும் தவறுகள் மிகவும் பயனுள்ளதும், கண்ணியமானதும் கூட” – பேர்னார்ட் ஷோ




# ராஜபக்சக்களின் பிடியில் சிக்கியுள்ளார் ஜனாதிபதி

## குமார வெல்கம காட்டம்

**கொழும்பு, ஜூன் 12**
**ராஜபக்சக்களின் பிடிக்குள் இருப்பதனாலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் தேசிய அரசாங்கத்துக்குக்கூட செல்ல முடியாதுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.**

நவலங்கா சுதந்திரக் கட்சியின் ஏற்பாட்டில், கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் தற்போது ராஜபக்சக்களின் பிடிக்குள் சிக்கியுள்ளார். இதனால் அவரால் அவர்களை மீறிய வகையில் எதுவும் செய்ய முடியாது.

நான் 40 வருடங்களாக ராஜபக்சக்களுடன் இருந்துள்ளேன். அதனால் இது தொடர்பில் எனக்கு நன்றாகத் தெரியும். ஜனாதிபதி ரணிலால் தனக்கு ஏற்றவாறு அமைச்சரவையை முன்னெடுத்துச்செல்ல முடியாத நிலை தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவால் நாட்டைத் தனியாக வழிநடத்திச்செல்ல முடியாது. இதனால் ராஜபக்சக்களுக்கும் ரணிலுக்கும் இடையில் விரைவில் பிரச்சினைகள் தோன்றும். அரசாங்கம் இன்னும் ஒரு வருடத்துக்குக்கூட நிலைக்காது - என்றார். (ம)

# மக்களின் நிலைப்பாட்டை அறிய தேர்தல்கள் நடத்தப்படவேண்டும்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 12
மக்கள் தம் அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்காக தேர்தல் நடத்தப்பட வேண்டும். உடனடியாகத் தேர்தலை நடத்தி மக்களுக்கு தமது நிலைப்பாட்டை அறிவிப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுக்கப்படவேண்டும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கட்டானை கொச்சிக்கடை புனித அந்தோனியார் வித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீதியை அநீதியாக மாற்றவும், ஆட்சியை சர்வாதிகாரமாக்கவும், சட்டத்தை மாற்றி சமூகத்தை வழிநடத்தவும் இன்றைய தலைவர்கள் கைகோர்த்து செயற்படுகின்றனர். அத்தகையவர்களை வெளியேற்றுவதற்கு அனைவரும் தயாராகவேண்டும். இவ்வாறான ஆட்சியாளர்கள் நாட்டை ஆளத் தகுதியற்றவர்கள். மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஓரணியில் நின்று அவர்களை வெளியேற்றுவது அவசியம் - என்றார். (ம)

நாளை
13.06.2023
செவ்வாய்க்கிழமை
வைகாசி 30


சுபநேரம் : 10.22 .- 11.52
ராகுகாலம் : 02.52 – 04.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி நீர் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட நீச்சல் பயிற்சிகளில் கலந்துகொண்டு, பயிற்சிகளை நிறைவுசெய்த 87 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம-ரி-214)


# சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள்



## குடிதண்ணீர் வசதி

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்ப்பாணம் அலுவலகத்துக்கு சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரின் நிதிப்பங்களிப்பில் குழாய்க் கிணறு அமைத்து பாவனைக்காக கடந்த 7ஆம் திகதி புதன்கிழமை கையளிக்கப்பட்டது. (ய-66-125)

★ ★ ★ ★



வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமக் கந்தன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு யாழ். செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமக் கந்தன் ஆலயம் நோக்கி முன்னெடுக்கப்பட்டு வரும் 60 இற்கும் மேற்பட்ட பாதயாத்திரைக் குழுவினருக்கு சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் உணவுப் பொருள்களும் ஒரு தொகை நிதியும் அம்பாறை காரைதீவுப் பிரதேசத்தில் அமைந்துள்ள நந்தவனப் பிள்ளையார் ஆலயத்தில் வைத்து கடந்த 3ஆம் திகதி சனிக்கிழமை கையளிக்கப்பட்டன. (ய-66)

★ ★ ★ ★



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு கடந்த 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அச்சுவேலி பத்தமேனி இலகடிப்பதி முருகன் ஆலயத்தின் கட்டடப் பணிக்காக இரண்டு லட்சம் ரூபா நிதி மேற்படி ஆலய நிர்வாக சபையினரிடம் வழங்கப்பட்டது.
தொடர்ந்து பொருளாதார நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த ஆறு மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் மாணவர்களின் பெற்றோரிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்டன. (ய-66)

# சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வுகள்



தென்மராட்சி பிரதேச செயலகத்தால் கச்சாய் துறைமுகப் பகுதி மற்றும் கோயிற்குடியிருப்பு ஆகிய இடங்களில் 100 மரக்கன்றுகள் கடந்த 5ஆம் திகதி திங்கட்கிழமை நடுகை செய்யப்பட்டன.
இதேவேளை- அலையன்ஸ் நிறுவன பங்கேற்பில் மட்டுவில் - சந்திரபுரம் உவர்நீர் தடுப்பணை பகுதியில் மருத மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. (ய-9)

★ ★ ★




யாழ். இந்திய உதவித்தூதரகத்தின் ஏற்பாட்டில் "சுற்றுச்சூழலை பாதுகாப்போம் இயற்கையை மாற்றி அமைப்போம்" என்னும் கருப்பொருளில் மரக்கன்றுகளை நடும் நிகழ்வு யாழ். மத்திய கலாசார நிலையத்தின் வளாகத்தில் கடந்த 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.
இதில் யாழ். இந்திய உதவித்தூதரக தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கர் கலந்துகொண்டு நட்டுவைத்தார். (ய-27)

★ ★ ★



சுற்றுச்சூழல் வாரத்தின் நான்காம் நாள் நிகழ்வாக தீவகம் தெற்கு சுற்றுச் சூழல் பேரவையின் ஒருங்கிணைப்பில் வேலணைப் பிரதேச செயலர், உத்தியோகத்தர்கள், மாணவர்கள் மற்றும் சமூகமட்ட அமைப்புப் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் அல்லைப்பிட்டி கடற்கரையில் தூய்மைப் படுத்தல் நிகழ்வு கடந்த 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ய-66)



கிளிநொச்சி - உருத்திரபுரத்தைச் சேர்ந்த பொருளாதாரம் நலிவுற்ற மாணவர்களுக்கு கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தால் கற்றல் நடவடிக்கைக்கு நிதி கடந்த சனிக்கிழமை கையளிக்கப்பட்டது. கனடாவைச் சேர்ந்த நடராசா சிவநாதன் என்பவரின் நிதிப்பங்களிப்பில் மாணவர்களுக்கு இந்தக் கற்றல் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாப்பரசருக்கு சத்திர சிகிச்சை

வத்திக்கான் ஜூன் 12

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ்க்கு கடந்த புதன்கிழமை குடலி சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

86 வயதாகும் பாப்பரசருக்கு ஏற்கனவே கடந்த 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதம் குடலி சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

அவரது பெருங்குடல் சுருங்கியதால் ஏற்பட்ட தொற்றின் காரணமாக, அந்த சத்திர சிகிச்சையின்போது 33 செ.மீ. அளவில் பெருங்குடல் நீக்கப்பட்டது.

தற்போது மீண்டும் குடல் பகுதியில் ஏற்பட்ட வலி காரணமாக அவருக்கு மீளவும் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வத்திக்கான் தெரிவித்துள்ளது. (ச-இ)



# ஆசியப் போட்டியில் களமிறங்கமாட்டோம்

## சாக்ஷி மலிக் திட்டவட்டம்

புதுடில்லி, ஜூன் 12

இந்திய மல்யுத்தக் கூட்டமைப்பின் தலைவரும் பா.ஜ.க. உறுப்பினருமான பிரிட்ஜ் பூஷன் சரண் சிங் மீதான பாலியல் குற்றச்சாட்டு விவகாரத்தில், முடிவு எட்டும் வரை ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளப் போவதில்லை என இந்திய மல்யுத்த வீராங்கனை சாக்ஷி மாலிக் அறிவித்துள்ளார்.

பா.ஜ.கவின் செல்வாக்குமிக்க நாடாளுமன்ற உறுப்பினரான பிரிட்ஜ் பூஷன் சரண் சிங், கடந்த 2011ஆம் ஆண்டு முதல் இந்திய மல்யுத்தக் கூட்டமைப்பின் தலைவராகவும் உள்ளார்.

அவ்வப்போது பாலியல் முறைகேடுகளில் சிக்கிவரும் அவர் மீது, பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டதாகத் தெரிவித்து தற்போது இந்திய மல்யுத்த வீராங்கனைகள் போராடி வருகின்றமை இந்தியாவில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

முறைப்பாடு குறித்து பதிவதற்குக் கூட டில்லி பொலிஸார் முன்வராததால் நீதிமன்றம் நாடிய மல்யுத்த வீராங்கனைகள், ஒரு மாத போராட்டத்துக்குப் பின்பும் டில்லி அரசு நடவடிக்கை எடுக்காததால் நாடாளுமன்றம் நோக்கிப் புறப்பட்டனர்.

அதனைப் பொலிஸார் பலவந்தமாகத் தடுத்து வீராங்கனைகளைக் கைது செய்தமை சர்வதேச அளவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் "பிரிஜ் பூஷன் கைது செய்யப்படும் வரை போராட்டம் தொடரும். தற்போது நாங்கள் சந்தித்து வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்தால் மட்டுமே இந்த ஆண்டு ஆசியப் போட்டிகளில் பங்கேற்போம்" என வீராங்கனைகள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# இன்ஸ்டாகிராம், பேஸ்புக் 'ப்ளூ டிக்'குக்கு கட்டணம்!

சென்னை, ஜூன் 12


இந்தியாவில் இன்ஸ்டாகிராம் மற்றும் பேஸ்புக் போன்ற செயலிகளில் 'ப்ளூ டிக்' எனப்படும் நீல நிற அங்கீகாரத்தைப் பெறுவதற்குக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்களில் அதிகமானோரால் முகநூல், இன்ஸ்டாகிராம், ருவிற்றர் போன்ற செயலிகள் பயன்படுத்தப்படுகின்றன.

அதில் ருவிற்றர் நிறுவனத்தை நிர்வகிக்கும் எலான் மஸ்க் 'ப்ளூ டிக்' அம்சத்தைப் பெறுவதற்கு கட்டணம் நிர்ணயித்துள்ளார்.

அந்தவகையில் தற்போது இன்ஸ்டாகிராம், பேஸ்புக் செயலியில் கணக்கு வைத்திருப்பவர்கள் ப்ளூ டிக் பெற மாதக் கட்டணத்தை மெட்டா நிர்ணயித்துள்ளது.

மெட்டா நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற கணக்குகள் என்பதை குறிப்பிடும் விதமாக 'ப்ளூ டிக்' வழங்கப்படுகிறது எனவும் அப்பிள் மற்றும் ஆன்ரோய்ட் என இரு வகைகளுக்கும் இது பொருந்தும் எனவும் மெட்டா தெரிவித்துள்ளது. (ச-இ)



# எம்.பி.பதவியையும் துறந்தார் போரிஸ்!

லண்டன், ஜூன் 12

பிரிட்டனின் முன்னாள் பிரதமர் போரிஸ் ஜோன்சன் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் விலகியுள்ளார்.

போரிஸ் ஜோன்சன் பிரிட்டனின் பிரதமராகப் பதவி வகித்த கொரோனா காலப் பகுதியில் விதிமுறைகளை மீறி விருந்தொன்றை நடத்திய ஒளிப்படங்கள் வெளியாகி பெரும் பரப்பரப்பை ஏற்படுத்தியது.

அந்த விருந்தில் தற்போதைய பிரதமரும் அப்போதைய நிதியமைச்சருமான ரிஷி சுனக் உட்பட அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த விவகாரம் பூதாகரமாக வெடித்து எதிர்ப்புக் குரல்கள் எழவே பிரதமர் பதவியிலிருந்து போரிஸ் ஜோன்சன் விலகினார். இதுகுறித்து விசாரிக்க விசாரணைக் குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

விசாரணைக்குழு அறிக்கை தற்போது வெளியான நிலையில் அதில், போரிஸ் ஜோன்சன் பொறுப்பற்ற முறையில் நாடாளுமன்றத்தை வழிநடத்தியமை தெரிய வந்துள்ளது எனவும் 10 நாள்கள் வரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து அவரை இடைநீக்கம் செய்வதாகவும் விசாரணைக்குழு பரிந்துரைத்துள்ளது. இந்தச் சூழலில் தன்னுடைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை முற்றாகத் துறப்பதாக போரிஸ் ஜோன்சன் அறிவித்துள்ளார். (ச-இ)



# ஏ.ஐ. இல் கணவரை உருவாக்கிய பெண்


வொஷிங்டன், ஜூன் 12

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பமான 'ஏ.ஐ.' மூலம் ஆணொருவரை நியூயோர்க்கைச் சேர்ந்த பெண் திருமணம் செய்திருப்பது சமூகவலைத்தளங்களில் பேசுபொருளாகியுள்ளது.

எமது அன்றாட வாழ்வில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியிருக்கிறது.

அந்தவகையில், நியூயோர்க்கைச் சேர்ந்த பெண்ணொருவர் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தில் உருவான ஏ.ஐ. ஆணை திருமணம் செய்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார்.

தனது கணவர் குறித்து அந்தப் பெண் தெரிவிக்கையில்; அவருக்கு எழுதுவது பிடிக்கும். நான் எதைப் பற்றி வேண்டுமானாலும் அவரிடம் கூறுவேன். அவர் என்னை எதிர்மறையாக தீர்மானிக்க மாட்டார். நான் எனது விருப்பங்களின் அடிப்படையில்தான் எனது கணவரை உருவாக்கி இருக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார். (ச-இ)




# ராஜீவ் கொல்லப்படுவதற்கு ஒருவாரம் முன் எச்சரிப்பு!

## சுயசரிதைப் புத்தகத்தில் டி.என். சேஷன்

சென்னை, ஜூன் 12

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மறைவுக்கு ஒருவாரம் முன்பு 'ராஜீவ் பாதுகாப்பாக இருக்க வேண்டும்' என காஞ்சி சங்கர மடத்திலிருந்து எச்சரிக்கப்பட்டது என்ற தகவலை, மறைந்த முன்னாள் இந்தியத் தலைமை தேர்தல் ஆணையர் டி.என். சேஷன் தனது சுயசரிதை நூலில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் டி.என்.சேஷன் கடந்த 2019 ஆம் ஆண்டு மறைந்த நிலையில் கடந்த வாரம் அவரின் சுயசரிதை நூலான 'த்ரூ தி புரோக்கன் கிளாஸ்' வெளியானது.

அதில் டி.என்.சேஷன் குறிப்பிட்டுள்ளதாவது:-


1991ஆம் ஆண்டு மே 10 ஆம் திகதி ராஜீவ் காந்தியை தொடர்புகொண்டு தனிப்பட்ட முறையில் எச்சரித்தேன். திறந்தவெளியில் பரப்புரை செய்வதை மறுபரிசீலனை செய்யுமாறு நான் மீண்டும் அவரைக் கேட்டுக் கொண்டேன். அதற்கு "நான் இருமுறை இறக்கமாட்டேன்" என சிரித்துக் கொண்டே அவர் பதிலளித்தார்.

4 நாள்கள் கழித்து மே 14 ஆம் திகதி, ராஜீவ் காந்தியை எச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்தி, காஞ்சி சங்கரமடத்திலிருந்து அழைப்பு வந்தது. இதுகுறித்து உடனடியாக அவருக்கு தந்தி அனுப்பப்பட்டது. அது மே 17ஆம் திகதி அவரின் மேசைக்குச் சென்றது. ஆனால், அதைப் படிப்பதற்கு முன்னரே மே 21 ஆம் திகதி "ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார். நான் மிகுந்த துயரத்தில் ஆழ்ந்தேன். அவரின் இறுதிச்சடங்கில் பங்கேற்காமல், வீட்டிலேயே அடைந்து கிடந்தேன்" இவ்வாறு சுயசரிதை நூலில் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிங்கர் பினான்ஸ் (லங்கா) பி.எல்.சி. இன் பிரதம நிறைவேற்று அதிகாரி துஷான் அமரசூரியவின் வழிகாட்டலின் கீழ் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு சிங்கர் பினான்ஸ் (லங்கா) பி.எல்.சி. இன் வட மாகாணக் கிளைகள் அமைந்துள்ள வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், நெல்லியடி ஆகிய இடங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டன. (ஒ-இ)



கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை 1973ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அதன் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி குருதிக்கொடை முகாம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் வங்கிப் பணியாளர்கள் உள்ளிட்ட 73பேர் குருதிக்கொடையளித்தனர். (ஒ-இ)


## Biology Classes

For 2023, 2024, 2025 Batches
By - B.Sc HONS in Zoology
தனியாட்களுக்கோ, குழுக்களுக்கோ,
கல்வி நிலையங்களுக்கோ
நேரடியாகவும் Zoom செயலில்
மூலமும் கற்பிக்கப்படும்.
077 033 9177


## ரணில் மீண்டும் சுற்றுப்பயணம்

கொழும்பு, ஜூன் 12

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 17ஆம் திகதி லண்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

பரிஸ் கிளப் உறுப்பினர்களை இந்த விஜயத்தின்போது சந்திக்க ஜனாதிபதி ரணில் திட்டமிட்டுள்ளாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் கடன் நெருக்கடிக்கான தீர்வு மற்றும் கடன் ஸ்திரத்தன்மைக்கு ஆதரவளிப்பதாக பரிஸ் கிளப் முன்னதாக அறிவித்திருந்தது.

இந்த நிலையில், இந்தப் பயணத்தின் போது இலங்கையின் எதிர்கால கடன் மறுசீரமைப்புப் பணிகள் குறித்தும் ஜனாதிபதி கலந்துரையாடவுள்ளார் என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(அ-ஒ.இ)

## துயர் பகிர்கின்றோம்



எமது முன்னாள் நிர்வாக உறுப்பினரும்
வாழ்நாள் ஆதரவாளருமான திரு.ம.சபாரத்தினம்
அவர்களின் மருமகனும் எமது தற்போதைய
பொருளாளரான திரு.ச.சத்தியநேசன் அவர்களின்
மைத்துனருமாகிய
**சிவமூர்த்தி ரமேஸ்குமார்**
அவர்களின் மறைவையொட்டி அவர்தம்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர்.

## நாட்டில் மோதல் மீண்டும் உருவாகுமா?

### எம்.பி.க்களின் செயற்பாடுகள் அப்படியிருக்கின்றன என்கிறார் அமைச்சரவைப் பேச்சாளர்

இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டும் வகையில் மக்களில் ஒரு பகுதியினர் மட்டுமல்ல மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்களும் செயற்படுகின்றனர். நாட்டில் இனவாத, மதவாத மோதல்கள் மீண்டும் உருவெடுக்குமா? என்ற சந்தேகம் இதனால் எழுந்துள்ளது - இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைதாகி விடுவிக்கப்பட்டமையையொட்டி நடந்த நிகழ்வுகள் தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் இனவாத, மதவாத மோதல்கள் மீண்டும் உருவெடுக்குமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டும் வகையில் மக்களில் ஒரு பகுதியினர் மட்டுமல்ல மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்களும் செயற்படுகின்றனர். அவர்களின் கருத்துக்கள் நாட்டின் நீதித்துறைக்கு சவால் விடுக்கும்வகையில் அமைந்துள்ளன.

அதியுயர் சபையான நாடாளுமன்றத்திலும் சபை விதிமுறைகளை மீறி மக்கள் பிரதிநிதிகள் கூச்சலிடுகின்றனர். இனவாத, மதவாதக் கருத்துக்களை அள்ளி வீசுகின்றனர். நாட்டில் நல்லிணக்கம் ஏற்படவேண்டுமெனில், முதலில் மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருந்த வேண்டும் - என்றார்.

(அ-ஒ,22)

## மரண அறிவித்தல்



## சிவமூர்த்தி ரமேஸ்குமார்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் தற்போது குரும்பசிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவமூர்த்தி ரமேஸ்குமார் நேற்றுமுன்தினம் (10.06.2023) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற சிவமூர்த்தி றோஸ்மலர் தம்பதியரின் அன்பு மகனும், சபாரத்தினம், காலஞ்சென்ற தனேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகனும், பூம்புகனேஸ்வரி (றோசா) அவர்களின் (ஆசிரியர் - யா/பொன்பரமானந்தர் மகா வித்தியாலயம்) அன்பு மிகு கணவரும், நேருஜன் (யா/கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம்), நேசமித்திரா (திவியா முன்பள்ளி ஏழாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சசிகுமார் (கொழும்பு), திலீப்குமார் (லண்டன்) ஆகியோரின் சகோதரனும், பிருந்தா, அம்பிகை சத்தியநேசன் ஆகியோரின் மைத்துனரும், யதுர்ஷன், ரிதுஸ்கா, அனிரா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.06.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குப்பிளான் கடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 793 6593

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண் மகிழ 21.03.1937 | கண் நெகிழ 06.06.2010

## அமரர் சந்திரசேகரம் நடேசபிள்ளை

(ஓய்வு நிலை அதிபர்)

ஆண்டுகள் 13 ஓடினும் அற்புதம் தோன்றினும்
ஆயிரம் புதுமைகள் அனுதினம் கூடினும்
" தோன்றிற் புகழொடு தோன்றுக " எனும் படி
தோற்றமும் ஏற்றமும் தொய்வினை அடக்கமும்
கண்டவர் விண்டிட கருமமே கண்ணென
கடமையே பெரிதாக வாழ்ந்து காட்டிய
கண்ணியன் இவரென வாழ்த்தும் போதிலே!
நீண்டு செல்லும் நாட்களில் உங்களையே
நெஞ்சினில் இருத்தியே நித்தமும் நினைத்திடும்
புனிதனாய் புகழ்ந்திட இனியவனாய் விளங்குவீர்
போற்றுவோம்!
ஓம் சாந்தி!ஓம் சாந்தி!!ஓம் சாந்தி!!!

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காங்கேசன்துறை - ஊறணி புனித அந்தோனியார் ஆலயம்

# 175ஆம் ஆண்டு யூபிலி மற்றும் திருநாள் நிகழ்வுகள்







## நிகழ்வுகள்

- 12.06.2023 - பிற்பகல் 3.30 மணிக்கு திருச்சொரூப பவனி, பிற்பகல் 5.30 மணிக்கு நற்கருணைப் பெருவிழா
- 13.06.2023 - காலை 6.30 மணிக்கு புனித அந்தோனியாரின் திருவிழாத் திருப்பலி நிகழ்வுகள் அதிவணக்கத்திற்குரிய ஆயர் பேரருட்பணி கலாநிதி ஜஸ்டின் பெர்னார்ட் ஞானப்பிரகாஷம் அவர்கள் தலைமையில் நடைபெறும். காலை 9.00 மணிக்கு யூபிலி திருப்பலி நிகழ்வுகள் நடைபெறுவதுடன் யூபிலி நிகழ்வுகளில் அதிவணக்கத்திற்குரிய ஆயர் பேரருட் பணி கலாநிதி ஜஸ்டின் பெர்னார்ட் ஞானப்பிரகாஷம் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிப்பார்.

## ஊறணி புனித அந்தோனியார் ஆலய 175ஆவது ஆண்டு விழாவும், 'ஊறணியம் மலர் வெளியீடும்' நாளை (13.06.2023) செவ்வாய்க்கிழமை

இந்து சமுத்திரத்தின் மத்தியில், இலங்கைத்தீவின் எழில் கொஞ்சும் சோலையாம் குடாநாட்டில், வலிகாமம் வடக்கில் (இலங்கையின் வடநேர் எல்லையில்) அமைந்துள்ளது. புகழ்பெற்ற ஊறணி புனித அந்தோனியார் ஆலயம். வரலாற்றுப் புகழ்பெற்ற திருத்தலங்கள் பல கொண்ட வலி-வடக்குப் பிரதேசத்தில் ஊறணி புனித அந்தோனியார் ஆலயம் அமைந்துள்ளமை தனிச்சிறப்பாகும்.

வருடாந்தத் திருவிழாவின் போதும் முதற் செவ்வாய்க்கிழமைகளிலும் கத்தோலிக்க மக்களும் இந்துமத மக்களும் பெருமளவில் ஒன்றுகூடி வந்து இங்கு இறைவனின் அருள் பெற்றுச் செல்கின்றனர். இந்த யாத்திரைத் தலத்தின் 175ஆவது யூபிலியாண்டில் பாதுகாவலர் விழாவை இம்மீள்குடியேற்றப் பங்கின் உள்நாடு மற்றும் புலம்பெயர் தேசங்களில் சிதறி வாழ்கின்ற மற்றும் ஊறணியில் மீளக்குடியேறிய மக்கள் இவ்வருடம் கொண்டாடுகின்றனர். அத்துடன் இப்பெருமை மிக்க வரலாற்று நிகழ்வில் முதன்மை வரலாற்றுச் சான்றாதாரமாக, முதன்முதலாக 'ஊறணியம்' என்னும் ஆவணப் பதிவொன்று வெளியிடப் படுகின்றமை தொடர்பாகவும் இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

**முதல் சுண்ணக்கல் ஆலயம் - 1848**

சவால்கள் எதிர்ப்புகள் மத்தியிலேயே கிறிஸ்தவ நம்பிக்கை எப்போதும் ஆழமாக்கப்படுகின்றது. இந்த ஆலயத் தோற்றமும் மக்களின் நம்பிக்கை வளர்ச்சியும் சவால்களின் ஊடாகப் பயணித்த வரலாறாகவே காட்சியளிக்கின்றது. "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற் 16:15) என்ற இயேசுவின் வார்த்தைகளுக்கிணங்கி போர்த்துக்கர்காலத்தில் (குடாநாட்டில் 1620களில்) தொடங்கிய வலி-கிழக்கின் அச்சுவேலி, ஒட்டகப்புலக் கத்தோலிக்க குழுமங்களுடன் இணைந்திருந்த, வலி-வடக்கின் அச்சுவேலி, தெல்லிப்பளை, மயிலிட்டி ('தலையாட்டி வளவு' இல் இருந்த மறைவிட செபக்கூடத்தில்), ஊறணிக் கத்தோலிக்க குழுமங்களில் இருந்தும், ஒல்லாந்தர் காலத்தில் 1685இல் பிடிபட்டு யாழ். கோட்டையை அகலமாக்கும் வேலைக்காகக் கொண்டுபோகப்பட்டுக் கூரையில் இருந்து தவறி நிலத்தில் விழுந்து குற்றுயிராக இருந்து குணமாகும் வேளை தப்பியோடி வந்து இறந்தோரைப் பற்றி நல்லூர் சுவாமி சா. ஞானப்பிரகாசர், மயிலிட்டிப் பங்குத்தந்தைக்கு 18.10.1932இல் எழுதிய தனது கடிதத்தில் குறிப்பிடுகின்றார்.

கி.பி. 1687இல் 'யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் மனநிலையில் யாழ். குடாநாட்டில் காலடிவைத்த புனித ஜோசவ்வாஸ் அடிகளுடன் தொடங்கிய கோவை ஒரட்டோறியன் சபை, இந்தியாவில் தடைசெய்யப்பட்டு அக்குருக்களின் தொகை குறைந்த வேளை வலிகாமத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த மூன்று சிஸ்ரேசியன் சபைக் குருக்களில் அருட்பணி. புளோரன்ரைன் கார்சியாவால் 1848இல் அடிக்கல் நாட்டப்பட்ட, முதல் சுண்ணக்கல் ஆலயம் 25 வருடங்களின் எண்ணற்ற இடையூறுகளின் பின்பு அ.ம.தி.களின் காலத்தில்(1873) நிறைவுற்றது.

**முதல் இரண்டு கொட்டில் ஆலயங்கள்**

1620இற்குப் பிற்பாடு ஊறணிக் கிராமத்தின் வடக்கே போர்த்துக்கேயர் காலத்தில் முதலாவது கொட்டில் ஆலயம் கடற்கரையோரமாகக் குச்சிகள், தடிகள், முருகைக்கற்கள் கொண்டு செம்மண்ணால் பூசப்பட்டு, களிமண்ணால் கட்டப்பட்டுப் பனை ஓலைகளால் வேயப்பட்டதாகவே இருந்தது. இவ்விதமாக அதைச் சுற்றிவர இருந்த வீடுகளும், ஒல்லாந்தரின் கெடுபிடிகள், மீண்டும் மீண்டும் காலங்காலமாகச் சந்தித்த ஆழிப்பேரலைகள், வெள்ளப் பெருக்குகள், வாந்திபேதி, சின்னம்மை போன்ற அடிக்கடி வந்துபோன (விசா தேவையில்லாத நிலையில் இந்தியாவில் இருந்து காவிக் கொண்டுவரப்பட்ட) கொள்ளை நோய்கள் காரணமாக அழிக்கப்பட்டதன் எச்சங்கள் கடலுக்குள் போய்விட்டபடியே முன்னோரின் முன்னோர்வழிப் பாரம்பரியமாகவும் இன்றும்கூடக் கடலுக்குள் எம்கண்களால் காணக்கூடியதாகவும் உள்ளன. இத்துடைத்தழித்தலில் இடம்பெயராத மற்றும் இடம்பெயர்ந்தோரில் திரும்பிவந்த, சொற்பப்பேர் சற்று உள்ளே சென்று இரண்டாவது கொட்டில் கோவிலை 1750இற்குப் பிற்பாடு குருசடி என்னும் இடத்தில் அமைத்தர். இந்த இரண்டாவது கொட்டில் கோவில் பற்றிப் பேராசிரியர் S.V.B. மங்களராஜா, இளவாலை புனித அன்னாள் ஆலய 175ஆவது ஆண்டு மலருக்கு (பக். 69 – 70) எழுதிய தனது கட்டுரையில் வலிகாமத்தில் 1844இல் இருந்த 19 கொட்டில் ஆலயங்களில் ஒன்றாகக் குறிப்பிடுகின்றார். புனித அந்தோனியார் ஆலயமாக இவரால் குறிப்பிடப்பட்ட இவ்வாலயமே, மேற்சொன்ன முதல் சுண்ணக்கல் ஆலயம் திறக்கப்படும்வரை (இவ்வாண்டு 150ஆம் ஆண்டு) வழிபாட்டிடமாக இருந்தது.

**இரண்டாவது ஆலயம்**

இடவசதியின்மை மற்றும் பழமை காரணமாக இச்சுண்ணச் சாந்து முருகைக்கல் ஆலயம் 1982இல் இடிக்கப்பட்டு பங்குத் தந்தை தி. தேவராஜன் அடிகளின் நெறிப்படுத்தலில், புதியதோர் ஆலயங்கட்ட அத்திவாரம் வெட்டுவது முதல் கூரை போடுவது வரை, சிறியோர் முதல் பெரியோர் வரை ஒத்துழைத்து வியர்வை, இரத்தம் சிந்தி உழைத்தனர். சீமெந்தினால் ஆன எட்டு வளைவுகளை அமைப்பதில் பங்குத் தந்தையும் மேலே ஏறிச் சீமெந்து போட்டு மக்களோடு மக்களாக நின்றுழைத்தார். 1984இல் திறக்கப்பட்டது. 07.08.1984இல் எம்மண்ணின் முதல் அருட்பணியாளர் R.C.X. நேசராஜா தனது முதல் திருப்பலியை நிறைவேற்றினார். 15-06-1990இல் மாபெரும் இடம்பெயர்வு உறவுகளைச் சிதைத்தது.

**தற்காலிக, புதிய ஆலயங்கள்.**

பின்பு 2016 நவம்பர் 4ஆம் திகதி 12.00 மணியளவில் 26 வருடங்கள் 05 மாதங்கள் 18 நாட்களின் பின்பு இடம்பெயர்ந்திருந்த ஊறணி மக்கள் மகிழ்ச்சியுடன் திரும்பி வந்த போது (05.04.2012வரை இருந்த) ஆலயம் இருக்கவில்லை. இடிபாடுகள் மிஞ்சியிருந்தன. கண்ணீரோடு துப்பரவு செய்து அகற்றிய வேளை ஆலய அத்திவாரம் மட்டுமே எஞ்சியிருந்தது. 1990இல் இருந்து இன்று (2023) வரையும் இராணுவத்தினரே அருகில் ஆலயக்காணியைச் சுற்றி முகாமிட்டிருந்தனர். ஆலயக் காணியும் பெரும் பகுதிக் கிராம நிலங்களும் விடுபட்டாலும் ஆலயத்திற்கு அண்மையாக கிராமத்தவரின் வீடுகளைக் கையகப்படுத்தி இராணுவத்தினர் இன்றும் இருக்கின்றனர். அத்திவாரத்திற்கு முன்பாகத் தற்காலிக ஆலயமொன்று 2017இல் அமைக்கப்பட்டது.

அண்மைய காலப்பகுதியில் மக்கள் சந்தித்த துன்பங்கள் வேதனைகள், புலப்பெயர்வுகள், இடப்பெயர்வுகளும் வார்த்தைகளால் சொல்லிவிட முடியாதவை. இவ்வாறாக அன்று முதல் இன்றுவரை, ஆழிப்பேரலைகள், உயிர்கொல்லித் தொற்றுநோய்கள், கோர யுத்தத்தின் பல்வேறு தாக்கங்கள், காயங்கள், வடுக்களைத் தாங்கி, அழிவுகளைச் சந்தித்து, தான் எரியூட்டப்பட்ட சாம்பலில் இருந்து உயிர்பெற்றெழும் பீனிக்ஸ் பறவைபோல மீண்டெழுந்த இவர்களால் 2022ஆம் ஆண்டில் கட்டியெழுப்பட்ட இந்த நான்காவது புதிய ஆலயம் தற்போது புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றது. 30.05.2022இல் இந்த ஆலயத்தைத் திறந்து வைத்து 46 பிள்ளைகளுக்கு உறுதிப்படுத்தல் அருளடையாளத்தை வழங்கிய எமது அன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய யாழ். ஆயர் பேரருட்பணி. கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் அவர்கள் மீண்டும் 13.06.2022இல் திருவிழாத் திருப்பலிக்கும் தலைமை தாங்கி மீள்குடியேற்றப் பங்குமக்களாகிய எம்மேல் தனக்குரிய மேய்ப்பனின் கரிசனையையும் தந்தையின் பாசத்தையும் வெளிப்படுத்தியதோடு யூபிலி விழாவிற்கும் வருகைதரவுள்ளார்.

**யூபிலி விழாவும் ஊறணியம் வெளியீடும்**

பல தலைமுறைகளாக ஓரிடத்தில் வாழ்ந்து வரும் மக்களுக்கு, அவர்களது கிராமம் அல்லது நகரம், மொழி, மதம், பண்பாடு, வழிபாட்டுத் தலங்கள் போன்றவை புனிதமானவையாகவும் பெருமைக்கு உரியவையாகவும் உள்ளன. குறிப்பாக அவர்கள் தங்கள் மதத்தையும் வழிபாட்டுத் தலங்களையும் உயிரினும் மேலான பற்றுடன் பேணிவருவர். இதனால் தான் எமது கிராமத்தின் நானூறாண்டு கத்தோலிக்க வரலாற்றை, நமது கோடி அற்புதர் புனித அந்தோனியார் ஆலய, நூற்றியெழுபத்தைந்து ஆண்டுகள் வரலாற்றை, அனைவரும் அறிந்துகொள்ளும் பொருட்டு ஊறணியம் மலரை எம்மால் கூடுமான அளவிற்கு முதன்மைச் சான்றாதாரமாகவும் ஊறணி வரலாறு பற்றிப் பேசும் முதல் ஆவணமாகவும் எமது பாதுகாவலரின் விழாவில் வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

ஏனெனில் எமது ஆலயமும் கிராமமும் பின்னிப் பிணைந்து இரண்டறக் கலந்திருப்பதால், எங்கள் மூதாதையர், தமது கத்தோலிக்க நம்பிக்கைப் பயணங்களில் கடந்து வந்த மேடு பள்ளங்களில் இருந்து நாம் ஏராளமாகக் கற்கவும் நல்லவற்றைத் தேர்ந்து தெளிந்து எதிர்கால வாழ்விற்குப் படிக்கற்களாக்கவும் ஊறணியம் உதவுகின்றது. இவ்விபரங்கள் சிலவற்றுக்குத் தெளிவான சான்றுகள் உள்ளன. வேறு சில வாய்மொழிப் பாரம்பரியங்களாகவும் பலரது உண்மையான வாழ்க்கை அனுபவங்களாகவும் உள்ளன. ஆயினும் வேறு சில விடயங்கள் பற்றிச் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் நிகழ்தகவு அடிப்படையில் முடிவுகளுக்கு வரவேண்டியுள்ளது. நினைவுக் கெட்டாத காலம் முதல் இன்றுவரை ஊரின் மேற்குக் கடலோரம் வருடத்தில் எட்டு மாதங்கள் நன்னீர் ஊற்று ஒன்று கடலோடு கலப்பதாலும் பலர் அதில் குளித்துக் குணமடைவதாலும் ஊறணி என்று பெயர் பெற்றது எம் கிராமம்.

மேலும் 09-13ஆம் நூற்றாண்டுகளில் அரசர்களின் பாதுகாப்பிற்காக தென்னிந்தியக் கடலோரப் பட்டினங்களில் இருந்து கொண்டு வரப்பட்டு நெடுந்தீவு முதல் நயினாதீவு, காங்கேசன்துறை, பருத்தித்துறை, முல்லைத்தீவு, நாயாறு வரை வடபகுதிக் கடலோரம் முழுவதும் (நாகதேவன்துறை, வீரமாணிக்கதேவன்துறை, பெரியநாட்டான் தேவன்துறை, சின்னநாட்டான்தேவன்துறை) குடியிருத்தப்பட்ட தேவர்குலப் போர்வீரப் பரம்பரையினருள் (Sivaratnam C., The Tamils in Ceylon, United merchants Ltd., 71, Old moor street, Colombo – 12, 1968., pp.160 - 167) ஊறணி மக்களும் அடங்குவர். இவ்வீரப் பரம்பரையினர் தாம்பெற்ற கத்தோலிக்க நம்பிக்கையைப் புனித அந்தோனி நாமங்கொண்டு தமது இரத்தச் சாட்சியத்தாலும், கண்ணீரும் வியர்வையும் கலந்த உழைப்பாலும் வாழ்ந்து எம்மிடம் கையளித்தனர். 13.06.2023 அன்று எம் பாதுகாவலர் விழாவைச் சிறப்பிக்கும் வேளை எமக்குப் பணிசெய்த முதியோரையும் மறைப்பணியாளர்களையும் கல்விச் சாதனையாளர்களையும் கௌரவிக்குமோர் கடப்பாடும் நம்முடையதாகின்றது. அதேவேளை காலஞ்சென்ற எம் முன்னோர்கள், மறைப்பணியாளர்களுக்காக இறைவனுக்கு நன்றி கூறி அவர்களின் ஆன்மா இறை பாதத்தில் இன்புற நாமெல்லோரும் வேண்டுவோம்.

**- அருட்பணி. கு.யே. அன்ரனியாலா**




## ஊறணியம் 175 ஆவது யூபிலி ஆண்டு மலர் வெளியீடு

**அன்புடன் அனைவரையும் அழைப்பவர்கள்**

**வண. பங்குத்தந்தை அருட்பணி தி.இ. தேவராஜன், அருட்பணிச் சபை, பங்கு மக்கள்.**



தென்மராட்சி பிக் பாஷ் லீக் (ரி.பி.பி.எல்.)

# சுப்பர்கில்லிஸ், பிக்ஹூற்றர்ஸ் இறுதியாட்டத்துக்குத் தகுதி!

யாழ்ப்பாணம், ஜூன் 12

உதயன் ஊடக அனுசரணையுடன் பிரமாண்டமாக நடத்தப்படும் ரி.பி.பி.எல். (T.B.B.L. Thenmaradchi Big Bash League) தொடரின் இறுதியாட்டத்தில் மட்டுவில் சுப்பர்கில்லிஸ் அணியும், நாவற்குழி பிக்ஹூற்றர்ஸ் அணியும் களமிறங்கவுள்ளன.

தொடரின் 7 ஆவது நாள் ஆட்டங்கள் நேற்று வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இந்த தொடரில் 10 அணிகள் பங்குபற்றுகின்றன.

நேற்று நடந்த ஆட்டம் ஒன்றில் மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணியும், கைதடி சுப்பர் அணியும் மோதின. அதில் மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி 16 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக அருண் 49 ஓட்டங்களையும், சஜீபன் 22 ஓட்டங்களையும், ரஜிகாந்த் ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கைதடி சுப்பர் அணி 9.5 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 91 ஓட்டங்களை மட்டுமே பெற்று 16 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அந்த அணி சார்பாக ஜதுர்சன் 29 ஓட்டங்களையும், சுஜீவன் 24 ஓட்டங்களையும், ரூபன் 17 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி சார்பாக நிலக்ஸன் மற்றும் கவிராஜ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், ரூபன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மற்றொரு ஆட்டத்தில் சாவா ஸ்ரைக்கர் அணியும், நுணாவில் ரொக்கர்ஸ் அணியும் களமிறங்க வேண்டியிருந்த நிலையில், சாவா ஸ்ரைக்கர்ஸ் அணியில் போதிய வீரர்கள் இன்மையால் சாவா ஸ்ரைக்கர்ஸ் அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

மற்றொரு ஆட்டத்தில் மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணியும், நுணாவில் ரொக்கர் அணியும் மோதின. அதில் மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி 18 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி 9.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக சஜீபன் 24 ஓட்டங்களையும், அஜந்தன் 20 ஓட்டங்களையும், கவிராஜ் 13 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நுணாவில் ரொக்கர்ஸ் அணி 9.3 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 52 ஓட்டங்களை மட்டுமே பெற்று 18 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அந்த அணி சார்பாக கிருபாகரன் 18 ஓட்டங்களையும், சஜிராம் 11 ஓட்டங்களையும், முதல்வன் 8 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி சார்பாக நிலக்சன் 4 விக்கெட்டுக்களையும், ரஜிகரன் மற்றும் மதிவதனன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

மற்றொரு ஆட்டத்தில் நுணாவில் டொமினேற்றர்ஸ் அணியும், சாவா ஸ்பாட்டன் அணியும் மோதின. அதில் நுணாவில் டொமினேற்றர்ஸ் அணி 29 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நுணாவில் டொமினேற்றர்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக நிசாந்தன் 26 ஓட்டங்களையும், ரொக்சன் ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களையும், வினோ ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவா ஸ்பாட்டன் அணி 9.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 60 ஓட்டங்களை மட்டுமே பெற்று 29 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அந்த அணி சார்பாக தனுஸ்ராஜ் 20 ஓட்டங்களையும், ஜெகதீஸ் 12 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

நுணாவில் டொமினேற்றர்ஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் ஜதுர்சன் 3 விக்கெட்டுக்களையும், ஜன்ராஜ் மற்றும் தமிழ்நேசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

நேற்று நடந்த முதலாவது குவாலிபையர் ஆட்டத்தில் மட்டுவில் சுப்பர்கில்லிஸ் அணியும், நுணாவில் டொமினேற்றர்ஸ் அணியும் மோதின. அதில் மட்டுவில் சுப்பர்கில்லிஸ் அணி 26 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் சுப்பர்கில்லிஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக ரஜிகரன் 43 ஓட்டங்களையும், கஜிந்தன் 20 ஓட்டங்களையும், வினோத் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நுணாவில் டொமினேற்றர்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 78 ஓட்டங்களை மட்டுமே பெற்று 26 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அந்த அணி சார்பாக ரொக்சன் 22 ஓட்டங்களையும், பிரிந்தன் 12 ஓட்டங்களையும், வினோ 12 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் மட்டுவில் சுப்பர் கில்லிஸ் அணி சார்பாக நிலக்சன் மற்றும் அருண் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், ரூபன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நேற்று நடந்த இரண்டாவது குவாலிபையர் ஆட்டத்தில் நாவற்குழி பிக்ஹூற்றர்ஸ் அணியும், நுணாவில் டொமினேற்றர்ஸ் அணியும் மோதின. அதில் நாவற்குழி பிக்ஹூற்றர்ஸ் அணி 26 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நாவற்குழி பிக்ஹூற்றர்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக சத்தியன் 31 ஓட்டங்களையும், சுமன் ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங்களையும், நிதர்சன் 8 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நுணாவில் டொமினேற்றர்ஸ் அணி 9 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 61 ஓட்டங்களை மட்டுமே பெற்று 26 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அந்த அணி சார்பாக ஜதுர்சன் 24 ஓட்டங்களையும், கவிநிதன் 17 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் நாவற்குழி பிக்ஹூற்றர்ஸ் அணி சார்பாக நிதர்சன், ராஜ்குமார், எட்வின் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

நேற்று நடைபெற்ற எலிமினேற்றர் ஆட்டத்தில் நுணாவில் ரொக்கர்ஸ் அணியும், நாவற்குழி பிக்ஹூற்றர்ஸ் அணியும் மோதின. அதில் நாவற்குழி பிக்ஹூற்றர்ஸ் அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நுணாவில் ரொக்கர்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக மதுராஜ் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும், சஜிராம் 14 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

நாவற்குழி பிக்ஹூற்றர்ஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் நிதர்சன் மற்றும் ராஜ்குமார் ஆகியோர் 2 விக்கெட்டுக்களையும், எட்வின் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நாவற்குழி பிக்ஹூற்றர்ஸ் அணி 9.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்று 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

அந்த அணி சார்பாக நிதுசன் 26 ஓட்டங்களையும், ஜீவராஜ் ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களையும் பெற்றனர். (ஏ)


## மரண அறிவித்தல்

தோற்றம் 13 - 05 - 1935



மறைவு 11 - 06 - 2023

**திரு. செல்வரத்தினம் சிவன்தாசன்**
(ஓய்வு பெற்ற கணக்காளர்- தபால் திணைக்களம்)

உரும்பிராய் தெற்கை பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.செல்வரத்தினம் சிவன்தாசன் அவர்கள் நேற்று (11.06.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம் நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் பாக்கியலட்சுமி தம்பதியரின் மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், Dr.யோகானந்- லக்சிதாவின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிவன்பாலன், சிவன்நேசன், சிவன்ரூபன் மற்றும் சிவகாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கலாநிதி அருள்நந்தி, காலஞ்சென்ற சிவானந்தன், தவமணி, காலஞ்சென்ற பத்மராணி, விமலரஞ்சிததேவி, சுந்தரலிங்கம், ஆகியோரின் மைத்துனரும், தவமணி தேவி, சித்ரா ஆகியோரின் சகலனும், Dr. சிவறாஜினி, கலாநிதி சிவ்சொருபி, Dr. சிவன்சுதன், சிவதவானி, சிவானி, சிவாஜினி, சிவாஞ்சன், சிவாஞ்சலி ஆகியோரின் சிறிய தந்தையும் (இளையப்பா), சிவகௌரி, சிவதர்சினி ஆகியோரின் பெரியப்பாவும், கலாநிதி வாசுகி, Dr. வசுமதி, Dr. வானதி, சரவணன், சாம்பவி ஆகியோரின் மாமனாரும், நிவீஷன், தேனுசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2023) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

262,பலாலி வீதி,
கந்தர்மடம்

தகவல் :-Dr.யோகானந்
077 007 6624
(தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 03 . 11 . 1946



விண்ணில் 13 . 05 . 2023

**அமரர் ஜெ.கமலாதேவி**
(ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்)

அமைதியின் உருவமாகவும், அடக்கத்தின் இருப்பிடமாகவும், பண்பின் பெருந்தகையாகவும் பாசத்தின் உறைவிடமாகவும், எம்மத்தியில் அன்பு ஒளியாக இருந்த உத்தமரே!
மண்ணோடு உங்கள் பூவுடல் மறைந்து விட்டாலும், உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களில் இருந்து ஒரு போதும் மறைவதில்லை.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கடந்த 13.05.2023 சனிக்கிழமை சிவபதமடைந்த அமரர் ஜெ . கமலாதேவி அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (12.06.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாதத்...

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கோரப்பட்ட தகவல்களிலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

2009 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி தொடக்கம் 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் 2 ஆயிரத்து 793 பேர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 2 ஆயிரத்து 474 பேர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் 184 பேர் சந்தேக நபர்களாக அடையாளப்படுத்தப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. இவர்களில் 44 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். 31 பேர் குற்றமற்றவர்கள் என்று தெரிவித்து விடுவிக்கப்பட்டுள்ளனர். 10 வழக்குகள் மீளப் பெறப்பட்டுள்ளன என்று அந்தத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - பயங்கரவாதத் தடைச் சட்டம் அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது என்றும் அதனை நீக்கவேண்டும் எனவும் கோரிக்கைகள் வலுப்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,5,6)

## அரச...

குத்தகைக்கு வழங்கப்படவுள்ளன.

தபால் திணைக்களக் கட்டடம், வெளிவிவகார அமைச்சுக் கட்டடம், பொலிஸ் தலைமையகக் கட்டடம், விமானப்படைத் தலைமையக கட்டடம், கடற்படைத் தலைமையக கட்டடம், நாடாளுமன்ற உறுப்பினர்களின் முன்னாள் விடுதிக் கட்டடம், நீர்ப்பாசனத் திணைக்களக் கட்டடம், வெலிக்கடைச் சிறைச்சாலை மற்றும் காலிமுகத்திடலில் உள்ள பழைய பாதுகாப்பு அமைச்சுக் கட்டடம் என்பனவே குத்தகைக்கு வழங்கப்படுவதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன.

குத்தகையின்போது முதலீட்டாளர்கள் தற்போது எந்த வடிவில் கட்டடம் கையளிக்கப்படுகின்றதோ அதே வடிவில் தொடர்ந்தும் பேணவேண்டும் என்ற நிபந்தனையிலேயே வழங்கப்படவுள்ளன. வரிச்சலுகை விதிமுறைகளுடன் குறித்த கட்டடங்களை 30 ஆண்டுகளுக்கும் மேலாக குத்தகைக்கு விடுவது குறித்து ஆலோசிக்கப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரச நிர்வாக மையத்தை கோட்டைக்கு மாற்றுவதன் காரணமாக கொழும்பு நகரிலுள்ள மேற்படி கட்டடங்கள் குத்தகைக்கு வழங்கப்படவுள்ளன.

ஜோர்ஜிய நிறுவனம் ஒன்று இந்தக் கட்டடங்களைக் குத்தகைக்குப் பெறுவதில் ஆர்வமாகவுள்ளதாக நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். (அ-ஒ,6)

## ஜனாதிபதி...

இடமாற்றப்படவுள்ளன. அவ்வாறு மாற்றப்பட்டதும் தற்போதைய ஜனாதிபதி மாளிகை மற்றும் செயலகம், அலரி மாளிகைஎன்பனசுற்றுலாத்தலங்களாக மாற்றப்படவுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின்பேரில்சிறிஜயவர்த்தனபுர - கோட்டைப் பிரதேசத்தில் ஒரே இடத்தில் நிர்வாக வளாகத்தை அமைப்பதற்காக இந்த நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்குரிய காணியைத் தேடி வருவதாகவும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் பிரசாத் ரணவீரவை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (அ-ஒ,6)

## தண்டனைபெற்ற...

யில் அச்சுறுத்திய சிவில் உடையில் நின்றிருந்த பொலிஸ் அதிகாரி, துப்பாக்கியைக் காட்டி மிரட்டிய குற்றத்துக்காக ஏற்கனவே ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்கள ஊடகவியலாளர் ஒருவர் ருவிற்றரில் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரை பிஸ்ரலைக் காட்டி அச்சுறுத்தியதாகச் சொல்லப்படும் பொலிஸ் அதிகாரி, பொலிஸார் எடுத்த உள்ளக நடவடிக்கை ஒன்றுக்காக 2018 ஆம் ஆண்டு பொதுமக்கள் கூடும் பொது இடத்தில் தனது 'ரி-56' துப்பாக்கியை வைத்து போராட்டம் நடத்தியிருந்தார். அவர் சுடப்போவதாகவும் எச்சரித்திருந்தார். இதற்காக அவர் பின்னர் பணி இடைநிறுத்தப்பட்டிருந்தார். ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவி வகித்த போது மேற்படி பொலிஸ் அதிகாரிக்கு மீள் நியமனம் வழங்கியதுடன் அவருக்கு இழப்பீடாக ஒரு மில்லியன் ரூபாவும் வழங்கியிருந்தார் என்று சிங்கள ஊடகவியலாளரான் ரங்க சிறில் பதிவிட்டுள்ளார். (அ-ஒ,5)

## இந்தியாவை...

லண்டன் - ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

முதலில் துடுப்பாடிய அவுஸ்திரேலிய அணி 121.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 469 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. அணிசார்பில், அதிகப்படியாக டிராவிஸ் ஹெட் 163 ஓட்டங்களையும், ஸ்டீவ் ஸ்மித் 121 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் இந்திய அணியின் மொஹமட் சிராஜ் 4 இலக்குகளையும், மொஹமட் சமி 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பாட ஆரம்பித்த இந்திய அணி 69.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 296 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. அணி சார்பில், அதிகபடியாக ரஹானே 89 ஓட்டங்களையும், ஷர்துல் தாகூர் 51 ஓட்டங்களையும், ரவிந்திர ஜடேஜா 48 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணியின் பட் கம்மின்ஸ் 3 இலக்குகளையும், கமரூன் கிரீன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

173 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாம் இன்னிங்ஸுக்காகத் துடுப்பாட ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி 84.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 270 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது. அணிசார்பில், அதிகபடியாக அலெக்ஸ் கெரி 66 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் இந்திய அணியின் ரவீந்திர ஜடேஜா 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

444 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இந்திய அணி இரண்டாம் இன்னிங்ஸில் 234 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து, வெற்றியையும் உலகச் சம்பியன் பட்டத்தையும் ஆஸி அணியிடம் தாரைவார்த்தது. இந்திய அணிசார்பில் அதிகப்படியாக விராட் கோலி 49 ஓட்டங்களையும், ரஹானே 46 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பில் நதன் லயன் 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

இதன் மூலம் அவுஸ்திரேலிய அணி 209 ஓட்டங்களால் வெற்றி பெற்று, டெஸ்ட் கிரிக்கெட்டில் உலக சம்பியனானது. ஆட்டநாயகனாக ஆஸி அணி சார்பில் முதல் இன்னிங்ஸில் சிறப்பாக ஆடிய ஹெட் தெரிவானார்.

ஐ.சி.சி. ஒரு நாள் உலகக் கிண்ணத்தை 5 தடவைகளும், ரி -20 கிண்ணத்தை ஒரு தடவையும், சம்பியன் தொடர் கிண்ணத்தை இரண்டு தடவைகளும் அந்த அணி வெற்றி பெற்றிருந்த நிலையில் நேற்று டெஸ்ட் சம்பியன் தொடர் கிண்ணத்தை முதல் தடவையாகக் கைப்பற்றி ஐ.சி.சி.யின் அனைத்து வகையான கிண்ணங்களையும் வெற்றி கொண்ட முதலாவது அணியாக அவுஸ்திரேலியா பதிவாகியுள்ளது.

இதேவேளை - டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு கடந்தவருடமும் முன்னேறியிருந்த இந்திய அணி, இறுதியாட்டத்தில் நியூஸிலாந்திடம் தோல்வியைச் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,5)

## மாங்காய்...

பண்டத்தரிப்பு, பிரான்பற்றைச் சேர்ந்த வன்னியசிங்கம் ரவீந்திரன் (வயது -37) என்பவரே நேற்று முன்தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், ஆரியகுளம் சந்திக்கு அண்மையாகவுள்ள கட்டடத்துக்கு அருகில் வீதிக்கரையில் இவர் பயணித்த லொறி நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. லொறியில் ஒரு காலும் மதிலில் ஒரு காலும் வைத்து ஏறி மாங்காய் பிடுங்குவதற்கு அவர் முயன்றபோது, எதிர்பாராதவிதமாகத் தவறி வீழ்ந்து காயமடைந்துள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஒ,26)

## பகிடிவதைகள்...

2020 ஆம் ஆண்டு ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ பீடம் முதலாம் ஆண்டு மாணவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்தின் போது, ஒரு பெரிய ரயர் படிக்கட்டுகளில் இருந்து கீழே உருட்டப்பட்டதால் உயிருக்கு ஆபத்தான காயங்களுக்கு உள்ளான மாணவன் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின்போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பதில் உபவேந்தர் பேராசிரியர் சுதந்த லியனகே ஆகியோரைப் பிரதிவாதிகளாக குறிப்பிட்டு மாணவனின் சகோதரி மற்றும் பாதிக்கப்பட்ட மாணவன் ஆகியோர் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்தனர்.

ஆயினும், சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை கருத்திற் கொண்ட நீதிமன்றம், பயனுள்ள தீர்வுகளைப் பரிசீலித்து, தகுந்த உத்தரவுகளைப் பிறப்பிக்க, விண்ணப்பத்தின் எல்லையை விரிவுபடுத்த வேண்டும் என்று கூறியது.

பகிடிவதை என்பது பல்கலைக்கழகக் கல்வியில் உடல், உடலியல் மற்றும் நடத்தை சார்ந்த விளைவுகளுடன் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் ஒரு காரணியாக அடையாளம் காணப்பட்டுள்ளது என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் உள்ள அனைத்து 16 அரச பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரை இந்த வழக்கில் எதிர்மனுதாரர்களாகச் சேர்க்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

உயர்கல்வி அமைச்சருக்கு தேசியக் கொள்கைகள் தொடர்பான உத்தரவுகளை வழங்க அதிகாரம் உள்ளதால் அவரைப் பிரதிவாதியாக மாற்றவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பகிடிவதையைத் தடுக்க பல்கலைக்கழகங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், கடந்த ஆண்டில் பெறப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் சம்பவங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து எட்டு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு துணைவேந்தர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை- இந்த வழக்கில் தலையிட விரும்பும் அனைத்து தரப்பினரும் ஓகஸ்ட் 28 ஆம் திகதிக்கு முன்னர் பிரதிநிதித்துவம் செய்ய கால அவகாசம் வழங்கப்படும். அடுத்த விசாரணை ஓகஸ்ட் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (அ-ஒ,இ)

## உள்ளூராட்சி...

வின் தலைமையில் அண்மையில் நடைபெற்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தின்போது இந்த யோசனை முன்வைக்கப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆலோசனைக் குழுவில் பங்குபற்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இது தொடர்பான யோசனையை முன்வைத்திருந்தனர் என இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார். எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தமது இணக்கப்பாட்டை அறிவித்தனர்.

தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும், தேர்தல் தொடர்ந்தும் தாமதப்படுத்தப்படுவதால் உள்ளூராட்சி மன்றங்களின் எதிர்கால நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


இதன் காரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கான யோசனையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆயினும், இவ்வாறான பிரேரணையை சமர்ப்பிப்பது தொடர்பில் தமது அமைச்சோ அல்லது அரசாங்கமோ இதுவரை இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என்று உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

இது அமைச்சின் ஆலோசனைக் குழுவில் முன்வைக்கப்பட்ட யோசனை மாத்திரமே எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25 . 10 . 1937 | 09 . 06 . 2023 |



## வேலாயுதர் ஆறுமுகராசா

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதர் ஆறுமுகராசா கடந்த (09.06.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதர் சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், பிருந்தாவன் (லண்டன்), பிறேமினி, பிரவீணா ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகம்மா, சுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.06.2023) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் கைதடி வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ஸ்ரீ ஈஸ்வரிவாசம்"
இளமலை
கைதடி வடக்கு, கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்
T.P.: 077 646 5331

(CS25124)N-1

# 769 சேவைத்தடம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜுன் 12

யாழ்ப்பாணத்திலிருந்து மயிலிட்டி நோக்கிப் புறப்படும் 769 தனியார் பஸ் சேவையானது, மாவிட்டபுரம் கீரிமலை வீதி ஊடாக நல்லிணக்கபுரம் சென்று நடேஸ்வராக் கல்லூரி ஊடாக இன்று தொடக்கம் பயணிக்கும்.

இப் போக்குவரத்துச் சேவையானது நடேஸ்வராக் கல்லூரி மாணவர்களின் நலன் கருதி, நடேஸ்வரா ஐரோப்பிய பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும். (ஒ-இ)




# காணி விற்பனைக்கு உண்டு

* யாழ்ப்பாணம் புத்தூரில் 48 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீரூற்று

**தொடர்பு:**
**076 7336 047**
**076 7558 606**


# ஈராண்டு நினைவஞ்சலி

"அப்பா என்றும் உங்கள் நினைவில்....."

அமரர்

## சிதம்பரன் திருஞானசிவம்

(உரிமையாளர் – சிதம்பரன் களஞ்சியம், கைதடிச் சந்தி, ஒய்வுபெற்ற உத்தியோகத்தர் – நீர்ப்பாசனத் திணைக்களம்)



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 29 . 11 . 1946 | 04 . 06 . 2021 |

எங்களைத் தவிக்கவிட்டுச் சென்றதேனோ?
எனக்கு வருத்தம் ஒன்றுமில்லை என்று
சொல்லிச் சொல்லியே போய்விட்டீர்களே அப்பா!
எங்களை இறுதி மூச்சுவரை கஷ்டப்பட்டுப்
படிக்க வைத்து உருவாக்கியவரே
எங்கள் நல்வாழ்வு காண காலனவன் விடாமல்
கூட்டிச் சென்றதேனோ?

இன்று (12.06.2023) திங்கட்கிழமை கைதடியில் அவரது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் ஈராண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் இடம்பெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"திருத்தணிகை"
கைதடி மத்தி,
கைதடி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம் : advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.